**சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியம் - 2019**

---

**1. நிதிக்கூற்றுக்கள்**

**1.1 அபிப்பிராயம்**

சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றல் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் நிதிக்கூற்றுக்களுக்குரிய குறிப்புகள், பொழிப்புடனான முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகள் என்பவற்றை உள்ளடக்கிய 2019 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(3) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டது. பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்க வேண்டுமென நான் கருதும் எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

நிதியத்தின் நிதிக்கூற்றுக்கள் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான அதன் நிதிச் செயலாற்றல் மற்றும் காசுப்பாய்ச்சல் என்பன உண்மையான மற்றும் நியாயமான விதத்தில் இலங்கைப் பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

**1.2 அபிப்பிராயத்திற்கான அடிப்படை**

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (இ.க.நி) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். நிதிக்கூற்றுக்கள் தொடர்பான எனது பொறுப்பு, கணக்காய்வாளரின் பொறுப்பு என்ற பிரிவில் மேலும் விபரிக்கப்பட்டுள்ளது. எனது இந்த அறிக்கையில் முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

**1.3 நிதிக்கூற்றுக்கள் தொடர்பாக முகாமைத்துவத்தினதும் அதனோடு தொடர்புடைய தரப்பினரதும் பொறுப்பு**

இந்நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும்போது, நிதியத்தின் தொடர்ந்தியங்கும் ஆற்றலைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும். முகாமைத்துவம் நிதியத்தைக் கணக்கொழிப்பதற்குக் கருதினால் அல்லது மாற்றீடு இல்லாவிடின் செயற்பாடுகளை இடை நிறுத்த நடவடிக்கை எடுத்தாலே தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் மற்றும் குறித்த விடயங்களை வெளிப்படுத்தல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதியத்தின் நிதி அறிக்கையிடல் செயற்பாடு தொடர்பான பொறுப்பு அவ்வாளுகைக்குட்பட்ட தொடர்புடைய தரப்பினரால் மேற்கொள்ளப்படும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் உப பிரிவின் பிரகாரம் நிதியத்தின் வருடாந்த மற்றும் காலநேரத்திலான நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்க கூடிய வகையில் தனது வருமானம், செலவினம், சொத்துக்கள் மற்றும் பொறுப்புகள் தொடர்பாக உரிய வகையில் ஏடுகள் மற்றும் அறிக்கைகளை பேணுதல் அவசியமாகும்.

## 1.4 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு தொடர்பாக கணக்காய்வாளரின் பொறுப்பு

ஒட்டு மொத்தமாக நிதிக்கூற்றுக்கள், மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்டதாக நியாயமான உறுதிப்படுத்தலை வழங்குதல் மற்றும் எனது அபிப்பிராயம் உள்ளடக்கப்பட்ட கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையை வழங்குவது எனது நோக்கமாகும். நியாயமான உறுதிப்படுத்தல் உயர் மட்டத்திலான உறுதிப்படுத்தலாக இருந்தபோதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை மேற்கொள்ளும்போது அது எப்போதும் பொருண்மையான தவறான கூற்றுக்கள் அற்றது என்பதற்கான உறுதிப்படுத்தல் அல்ல. மோசடிகள் அல்லது தவறுகள் தனியாகவோ கூட்டாகவோ தாக்கமளிப்பதால் பொருண்மையான தவறான கூற்றுக்கள் தாக்கமளிப்பதாக இருப்பதுடன் இந்நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பயன்படுத்துவோரால் பொருளதாரத் தீர்மானங்கள் எடுக்கும் போது அது தொடர்பாக ஏற்படக்கூடிய தாக்கங்களைக் கருத்திற் கொள்ள வேண்டும்.

என்னால் துறைசார் வெளிப்படை மற்றும் தொழில்துறை பின்னணியுடன் இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மேலும்,

- மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களில் ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் இனங்காணும் போதும் மதிப்பீட்டின் போதும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடுவதன் மூலம் மோசடிகள் அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய ஆபத்துகளை தவிர்த்துக் கொள்வதற்கும் போதுமான மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சான்றுகளைப் பெற்றுக்கொள்ளல் எனது அபிப்பிரயாத்திற்கு அடிப்படையாகும். பொருண்மையான பிறழ் கூற்றினால் எழும் தாக்கங்களை விட மோசடிகளால் இடம்பெறும் தாக்கம் பாரியதாக இருப்பதுடன் தவறான கூட்டிணைவு, தவறான ஆவணங்களைத் தயாரித்தல், வேண்டுமென்றே விட்டுவிடுதல் அல்லது உள்ளக கட்டுப்பாட்டை தவிர்ப்புச் செய்தல் மோசடி ஏற்படுவதற்கு காரணமாகின்றது.

- சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை திட்டமிடும் பொருட்டு நிதியத்தின் உள்ளகக் கட்டுப்பாடு சம்பந்தமாக புரிந்து கொண்ட போதும், உள்ளகக் கட்டுப்பாட்டின் ஆக்கபூர்வத் தன்மை தொடர்பாக அபிப்பிராயத்தை வெளியிடக் கருதவில்லை.

- முகாமைத்துவம் பயன்படுத்திய கணக்கீட்டு கொள்கைகளின் சரியான தன்மையினையும் பயன்படுத்திய கணக்கீட்டு மதிப்பீடுகளினதும் தொடர்புடைய வெளிப்படுத்தல்களினதும் நியாயபூர்வத் தன்மையை மதிப்பாய்வு செய்தல்.

- சம்பவங்கள் அல்லது நிலைமை காரணமாக நிறுவனம் தொடர்ந்தியங்குவது தொடர்பாக போதியளவு நிச்சயமற்ற தன்மை உள்ளதா என்பது தொடர்பாக பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றினடிப்படையில் கணக்கீடு சம்பந்தமான நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை தொடர்பான அடிப்படையைப் பயன்படுத்தலாம் எனத் தீர்மானிக்கப்பட்டது. பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் எண்ணுவதாயின் நிதிக்கூற்றுக்களிலுள்ள அத்தகைய வெளிப்படுத்தல்களுடன் எனது கணக்காய்வு அறிக்கையில் கவனம் செலுத்த வேண்டும். அந்த வெளிப்படுத்தல் போதுமானதாக இல்லாதிருப்பின் எனது அபிப்பிராயம் மாற்றத்திற்குள்ளாக வேண்டும். எனது முடிவானது கணக்காய்வு அறிக்கைத் தினம் வரையான கணக்காய்வுச் சான்றுகளின் அடிப்படையிலானவை. எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள், அல்லது நிலைமை காரணமாக தொடர்ந்தியங்கும் தன்மை முடிவுக்கு வரலாம்.

- வெளிப்படுத்தல்களை உள்ளடக்கிய நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கத்திற்கான அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் சம்பவங்கள் உசிதமானவாறும் நியாயமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளமையை மதிப்பாய்வு செய்தல்.

முடியுமான அளவு மற்றும் தேவையான எந்தவொரு சந்தர்ப்பத்திலும் பின்வருவனவற்றை பரீட்சிப்பதற்கு கணக்காய்வு விடயப் பரப்பும் விரிவுபடுத்தப்பட்டுள்ளது.

- தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமை, நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள், மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிமைக்கப்பட்டுள்ளனவா என்பதும் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், அறிக்கைகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமாக பேணப்படுகின்றதா என்பதும்,

- நிதியத்தின் ஆளுநர் சபையால் வழங்கப்பட்ட ஏதாவதொரு எழுத்துமூலச் சட்டம் அல்லது ஏனைய பொது அல்லது விசேட பணிப்புரைகளுடன் நிதியம் இணங்கியிருந்ததா என்பதும்,

- அதன் அதிகாரங்கள், பணிகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனுடனும் ஆக்க பூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவத் தீர்மானங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை 15.1 பந்தி மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 876(3)) | நியதிச் சட்டமல்லாத நிதியமொன்று தொடர்ந்தும் பேணப்பட்டு வருவதற்கு நியாயமான காரணங்கள் இருப்பின் அவ்வாறான நிதியங்கள் பாராளுமன்றச் சட்டத்தின் மூலம் சட்டபூர்வமாக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமெனக் குறிப்பிடப்பட்ட போதிலும், நிதியத்தை சட்டரீதியாக்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாது முகாமைத்துவச் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட பிரமாண விதிகளின் பிரகாரம் மீளாய்வாண்டு வரையில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. | 2013 இன் 1 ஆம் இலக்க திவிநெகும சட்டத்தின் பிரகாரம் சமுர்த்தி அதிகாரசபையில் அமுல்படுத்தப்பட்ட நிதியை அவ்வாறே நடைமுறைப்படுத்துமாறு பணிப்புரை வழங்கப்பட்டுள்ளது. இதன்படி திவிநெகும சட்டத்தின் பிரகாரம் லொத்தர் நிதியை நடைமுறைப்படுத்த திவிநெகும சட்டத்தின் மூலம் பாராளுமன்றத்தின் அங்கீகாரம் பெறப்பட்டமை, தற்போது அது சமுர்த்தி சட்டமாக மாறியுள்ளதாகவும் எனினும் நிதியை அரசியலமைப்பு மயமாக்குவதற்கான நடவடிக்கைகள் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் சட்ட பிரிவினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎப்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 4.1 ஆம் பந்தி மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் மூலம் 15.1 ஆம் பந்தி மூலம் வெளியிடப்பட்ட நிதிப்பிரமாணம் 877(1) | நிதியத்தின் செயற்பாடுகளுக்கு பாதீடொன்று தயாரிக்கப்படவில்லை. | நிதியத்தை சட்டபூர்வமாக்குவதற்கு தேவையான விதி ஒழுங்குமுறைகளைத் தயாரித்த பிறகு பாதீடொன்று தயாரிக்கப்படும் என்றும்,பாதீடு 2021 ஆம் ஆண்டு முதல் தயாரிக்கப்பட்டது என்றும். | - மேற்படி - |

## 2. நிதிசார் மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின் பிரகாரம் 2019 திசெம்பர் 31 ஆந் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான நிதியத்தின் நிதி விளைவு ரூபா 466,554,238 ஆன மிகையாக இருந்ததுடன் , அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் மிகையானது ரூபா 175,229,171 ஆனதுடன் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடுகையில் மீளாய்வாண்டின் நிதி விளைவு ரூபா 291,325,067 ஆன முன்னேற்றமொன்றைக் காட்டுகின்றது. மீளாய்வாண்டில் சீட்டிழுப்பு பங்களிப்புத் தொகை ரூபா 320,069,530 ஆல் அதிகரித்தமை இம்முன்னேற்றத்திற்கு பிரதான காரணமாகஇருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2018 திசெம்பர், 2019 சனவரி , பெப்ரவரி மற்றும் மார்ச் மாதங்களில், சீட்டிழுப்பில் வெற்றி பெற்ற 1,324 பேருக்கான காசோலைகள் வழங்கப்படாது ரூபா 4,104,150 செலவிடப்பட்டு 2019 யூலை 02 அன்று அரலியகஹ மந்திரயவில் விழாவொன்று நடாத்தப்பட்டு காசோலைகள் வழங்கப்பட்டன. | இவ்வாறான நிகழ்வுகள் 2019 ஆம் ஆண்டுக்கு மாத்திரமன்றி, அரலியகஹ மந்திரய , ஜனாதிபதி மாளிகை, அந்தனா விளையாட்டரங்கம், கடவத்த ஸ்வர்ணஜோதி வித்தியாலயம், இரத்தினபுரி விளையாட்டரங்கம், மாத்தறை விளையாட்டரங்கம், போன்ற இடங்களில் சில ஆண்டுகளைச் சேர்த்து வெற்றி பெற்ற பயனாளிகளுக்கு | தேவையற்ற இவ்வாறான செலவுகள் குறைக்கப்படல் வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | காசோலை வழங்கும் விழா பல நடைபெற்று வருகின்றதாகவும், இவ்வாறான விழாக்களில் உணவு, தேநீர் போன்ற உபசரிப்பு நடவடிக்கைகள், போக்குவரத்து செலவுகள் மற்றும் இதர செலவுகளுக்காக வீடமைப்பு லொத்தர் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தின் அங்கீகாரத்துடன் பெறப்பட்டு இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தாகவும், தேவையற்ற செலவுகள் எதுவும் ஏற்படவில்லை எனவும். | |

**3.2 செயற்பாட்டு செயற்திறனின்மை**

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | வெற்றி பெற்ற சீட்டிழுப்பு வெற்றியாளர்களில் 128 பேருக்கு உரிய தொகை ரூபா 25,600,000 ஆனது பயனாளிகள் இறந்தமை, பரிசு பெற்றவர் மானியங்களைப் பெறுபவராக இல்லாதிருந்தமை, வெளிநாட்டிற்குச் சென்றமை, விபரங்கள் கண்டுபிடிக்க முடியாதிருந்தமை, ஒரு முறை வெற்றி பெற்ற பயனாளிகள் மீண்டும் சீட்டிழுப்பிற்காக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு இடை நிறுத்தப்படும் முறையொன்றாக குறிப்பிட்ட காலப்பகுதிக்கு தரவு அமைப்பிலிருந்து பயனாளிகளின் பெயர்கள் நீக்கப்படுவதற்கான நடவடிக்கை எடுக்கப்படாமை போன்ற நானாவித காரணங்களின் அடிப்படையில் மாவட்ட அலுவலகங்களின் பரிசுத் தொகை மீண்டும் அனுப்பபட்டிருந்தது. இதனால் கணிசமான எண்ணிக்கையிலான சமுர்த்தியாளர்கள் வெற்றி வாய்ப்பை இழந்ததன் காரணமாக நிதியத்தின் நோக்கங்களை மற்றும் குறிக்கோள்களை அடைய முடியவில்லை. | வெற்றி பெற்றாலும் கணினியில் உள்ள தரவுகளை சரி செய்ய எடுக்கும் நேரத்தைப் பொறுத்து இந்த மாதிரியான சூழ்நிலை ஏற்படலாம், ஆனால் இந்த பணம் தகாத முறையில் செலவழிக்கப்படாது, மீதமுள்ள பணம் அனைத்தும் கணக்கில் செலவு வைக்கப்படும். மீதமுள்ள பணம் ஒரு சிறப்பு வீட்டுத் திட்டத்திற்கு பயன்படுத்தப்பட்டது, அதன்படி நிதியத்தின் நோக்கங்கள் மற்றும் குறிக்கோள்கள் செயற்படுகின்றன, தற்போது தகவல் தொழில்நுட்பப் பிரிவால் தரவு அமைப்பு மாதந்தோறும் சரி செய்யப்படுகின்றது. | ஏற்கனவே உள்ள அமைப்புடன் இணங்க வேண்டும் |

| | | | |
|---|---|---|---|
| (ஆ) | சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் பிரமாணம் இலக்கம் 17 இன் பிரகாரம் அனைத்து சீட்டிழுப்புக்களும் நடைபெறுவதற்கு முன்னர் அந்த மாதத்தில் சமுர்த்தி மானியத்திலிருந்து விலகிய மற்றும் புதிய பளனாளிகளின் விபரங்கள் கணனி தரவு அமைப்பிற்கு உட்படுத்தப்பட்டு நாளது வரையாக்கப்பட வேண்டியுள்ள போதிலும், அதன் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமையால் 2012 ஆம் வருடத்திலிருந்து 2019 ஆம் வருடம் வரையிலான 08 வருடங்களில் பரிசு பெற்ற 837 பயனாளிகளுக்கு உரிய ரூபா 154,150,000 ஆன பரிசுத் தொகையை வழங்குவதற்கு முடியாதிருந்தது. | 2020 இற்குப் பிறகு இந்த நிலைமை குறைக்கப்பட்டு தற்போது சரியான தரவு அமைப்பு தயாரிக்கப்பட்டு, குலுக்கல் நடத்தப்பட்டு வருகிறது. | ஏற்கனவே உள்ள அமைப்புடன் இணங்க வேண்டும். |
| (இ) | திவிநெகும வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் பிரமாண இலக்கம் 8 இன் பிரகாரம் வெற்றி பெறும் பயனாளிகளின் பொருளாதார நிலைமையை உயர்த்துவதற்கு பொருத்தமான திட்டங்களில் கவனஞ் செலுத்துதல் நிதியத்தின் குறிக்கோளாக இருந்த போதிலும், இது தொடர்பாக எவ்வித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை. | சமுர்த்தி வீடமைப்பு அபிவிருத்தி லொத்தர் நிதியத்தின் விதிமுறைகளின்படி, நிதியத்தின் அனைத்து நோக்கங்களையும் ஒரே நேரத்தில் பூர்த்தி செய்ய முடியாது, இதன்படி வருடாந்தம் மானியம் மற்றும் குறைந்த வருமானம் பெறுவோருக்கு 2,000 க்கும் மேற்பட்ட வீடுகள் வழங்கப்பட்டு வருகின்றன. நிதியின் நோக்கங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன. | நிதியத்தின் பிரமாணத்தின் பிரகாரம் செயற்படுத்து வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

### 3.3 நோக்கங்களுக்கு முரணாக நிதியம் பயன்படுத்தப்பட்டமை

| | கணக்காய்வு அவதானிப்புக்கள் | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | விசேட கவனம் கோரப்பட வேண்டிய குறைந்த வருமானம் பெறுபவர்களுக்கான வீடுகளை நிர்மாணிப்பதற்காக சமுர்த்தி பெறுநர்களின் மாதாந்த பங்களிப்பில் உருவாக்கப்பட்ட இந்நிதியத்தில் சமுர்த்தி பெறுநர்கள் அல்லாத 283 நபர்களுக்கு மீளாய்வாண்டில் ரூபா 56,600,000 செலவிடப்பட்டிருந்தது. | சமுர்த்தி பெறுநர்களை விட குறைவான வருமானம் கொண்டவர்களின் வீடுகள் மிகவும் மோசமான நிலையில் இருப்பதாக சமுர்த்தி மாவட்டப் பணிப்பாளர், பிரதேச செயலாளர், தலைமையகம்/வலய/ வங்கி முகாமையாளர்களின் | லொத்தர் நிதியம் அதன் நோக்கங்களை அடைவதற்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | அறிக்கை உறுதிப்படுத்தியுள்ளதாகவும், மேற்படி அறிக்கையானது மாவட்ட சமுர்த்தி பணிப்பாளர், பிரதேச செயலாளர், தலைமையகம;/வலய/வங்கி முகாமையாளர்கள் மற்றும் களத்திற்குப் பொறுப்பான சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் சரிபார்க்கப்பட்டு, அந்தத் தகவல் சரியானதா என்பதையும், வீடு வழங்குவது பொருத்தமானதா என்பதையும் உறுதிப்படுத்தியுள்ளதாகவும அதன்படி, இந்த வீடுகளை வழங்குவதில், விதிமுறைகளின்படி, பயனாளிகளின் சமூக பாதுகாப்பு நிலை மேம்படுவதைக் காணலாம் மற்றும் இந்த செயல்முறைக்கு வெளியே எந்த வீடும் அனுமதியின்றி வழங்கப்படவில்லை எனவும். | |
| (ஆ) | புத்தளம் மாவட்டத்தின் ஆராய்ச்சிக் கட்டுவ பிரதேச செயலகப் பிரிவில் உள்ள நகுல் எலிய கிராமத்திற்கு குறைந்த வருமானம் பெறும் 26 மீனவக் குடும்பங்களுக்காக ‘‘சமுர்த்தி நிவாச வாசனா’’ திட்டத்திற்காக நிதியத்தின் பிரமாணக் கோவைக்கு முரணாக 2017 மற்றும் 2018 ஆம் ஆண்டில் ரூபா 18,688,000 செலுத்தப்பட்டிருந்ததுடன் மீளாய்வாண்டில் பொறுப்பான அமைச்சர் கலந்து கொண்ட பதவியேற்பு விழாவிற்கு ரூபா 241,625 செலவிடப்பட்டது. | மாதாநத வீட்டுமனை சீட்டு குலுக்கல் தொடர்பான பரிசுகள் வழங்கப்படுவதோடு, இதுதவிர, மீதி பணம் இருந்தால், அத்தகைய வீடுகள் கட்டுவதற்கு பயன்படுத்தப்படும் என, வீடமைப்பு லொத்தர் நம்பிக்கைப்பொறுப்பு அறங்காவலர் குழு முடிவு செய்துள்ளது. நிதியத்திற்கு எந்தத் தீங்கும் இல்லை, எந்த வகையிலும் பணம் தவறாகப் பயன்படுத்தப்படாது, நோக்கங்களின்படி, செழிப்பான மற்றும் குறைந்த வருமானம் பெறுபவர்களும் சொந்தமாக ஒரு வீட்டைக் | - மேற்படி - |

| | | |
|---|---|---|
| | கொண்டிருப்பார்கள், மேலும் பல சமயங்களில், இந்த குறைந்த வருமானம் பெறுபவர்கள் ஒரு குழுவாக உள்ளனர். மானியம் காத்திருப்போர் பட்டியலில் உள்ளதாகவும் மற்றும் 26 பேருக்கு மானியம் வழங்க முடியாததால், இந்த குழுவினர் குறைந்த வருமானம் பெறுபவர்களாக கருதப்படுகிறார்கள். விழாச் செலவுகள் நிதியின் அங்கீகாரத்துடன் செலவிடப்பட்டதாகவும், அடிப்படைத் தேவைகள் தவிர தேவையற்ற செலவுகளுக்குப் பணம் செலவிடப்படவில்லை என்றும். | |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 நிதிக்கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 திசெம்பர் 22 ஆந் திகதிய பீஎவ்/423 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கை மற்றும் 2020 ஆகஸ்ட் 28 ஆந் திகதிய 01/2020 ஆம் இலக்க அரச நிதிச் சுற்றறிக்கையின் 15 ஆம் பந்தியில் உள்ளடக்கப்பட்ட நிதிப்பிரமாணம் 877(2)(ஈ) பிரகாரம் கணக்காண்டு முடிவடைந்து 2 மாதங்களுக்குள் நிதிக்கூற்றுக்கள் மற்றும் வருடாந்த செயலாற்றல் அறிக்கை என்பன கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியபோதிலும், மீளாய்வாண்டின் நிதிக்கூற்றுக்கள் 2022 மே 17 இல் சமர்ப்பிக்கப்பட்டது. | 2014 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்த பின்னர், ஒவ்வொரு அடுத்த ஆண்டுக்கான நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டு முந்தைய ஆண்டின் திருத்தங்களுடன் கணக்காய்வுக்கு சபமர்ப்பிக்கப்பட்டன, மேலும் 2018 ஆம் ஆண்டின் நிதிக்கூற்றுக்கள் கணக்காய்வு செய்து 2019 இல் சமர்ப்பித்ததால் தாமதம் ஏற்பட்டது. | நிதிப் பிரமாணம் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

## 4.2 கணக்காய்வுக் குழு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவத்தின் கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| திணைக்களத்தின் கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் குழுவினால் நிதியத்திற்கான கணக்காய்வு அவதானிப்புக்கள் கலந்துரையாடப்பட்டிருக்கவில்லை | எதிர்காலத்தில் அவதானிப்பில் குறிப்பிடப்பட்டுள்ள படி, இந்த நிதியம் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புகள் குறித்து கலந்துரையாடு வதற்கு உரிய அதிகாரிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். | சுற்றறிக்கை அறிவுறுத்தல் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |